**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை**

**முன்னிலை : செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L. (Hons.), LL.M.,**

**நீதித்துறை நடுவர், தேவகோட்டை**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் புதன்கிழமை

**குற்றவியல் பல்வகை மனு எண். 163/2026**

In

C.C. No 13/2023

1. கோவிந்தன்

த.பெ. கிருஷ்ணன்

**....... மனுதாரர் / எதிரி**

**//எதிர் //**

அரசுக்காக,

காவல் ஆய்வாளர்,

தேவகோட்டை தாலுகா காவல் நிலையம்,

குற்ற எண்: 202/2022

**......... எதிர்மனுதாரர் / குற்ற முறையிடுபவர்**

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. திருப்பதி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ......

**உத்தரவு**

1. மனுதாரரால் இந்த மனு பிணைகோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பு வாதங்களும், வழக்கு ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

2. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் மனுதாரர் கடந்த 08/01/2026 முதல் நீதிமன்ற காவலில் இருக்கிறார் என்றும், மனுதாரர் மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றும் எனவே மனுதாரர் / எதிரியை நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

3. அரசுதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி / மனுதாரர் மீது தேவகோட்டை தாலுகா காவல் நிலைய குற்ற எண். 202/2022 இதச பிரிவுகள் 457, 380-என்ற வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், எதிரியை பிணையில் விட்டால் எதிரி மீண்டும் இதே குற்றத்தை செய்வார் என்றும், எதிரி மீண்டும் விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகி விடுவார் என்பதாலும் அதனால் வழக்கு விசாரணையில் தொய்வு ஏற்பட்டு நிலுவையில் இருந்துவிடும் என்பதாலும், மேலும் எதிரி மீது 9 முன் வழக்குகள் பதியப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருவதாலும் எதிரியை பிணையில் விட கடும் ஆட்சேபனை தெரிவித்து வாதிட்டார்.

4. இருதரப்பு வாதங்களையும் வழக்கு ஆவணங்களையும் பரிசீலித்து கருத்தில் கொண்டதில் மனுதாரர் / எதிரி கடந்த 08/01/2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மனுதாரர் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள், மனுதாரர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் தன்மையையும், கருத்திற்கொண்டு மனுதாரர் / எதிரியை பிணையில் விடலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எனவே இம்மனு அனுமதிக்கப்பட்டு எதிரிக்கு கீழ்கண்ட நிபந்தனைக்குட்பட்டு பிணை வழங்கப்படுகிறது.

**i. மனுதாரர் ரூ.10,000/-த்திற்கு இரு ஜாமீன்தாரர்களுடன் பிணைப் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும்.**

**ii. மனுதாரர் பிணையில் வெளிவந்த பின்பு இந்நீதிமன்றத்தில் மறுஉத்தரவு வரும்வரை தினமும் காலை 10.30 மணிக்கு ஆஜர் ஆகி கையெழுத்திட வேண்டும் என்று நிபந்தனைகள் விதிக்கப்படுகிறது.**

**iii. மனுதாரர் BNSS பிரிவு 480(3)(a),(b),(c) ஆகியவற்றில் கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

POORNIMA

Digitally signed by POORNIMA
Date: 2026.03.18 18:01:45 +0530

நீதித்துறை நடுவர்,

தேவகோட்டை.